[2005 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர் சுத்திகரிக்கப்படுவதற்காகத்தான் நான் முன்பே கூறியதுபோல, 283 சென்ட் அரசு நிலத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அப்படித் தீர்மானிக்கப்பட்ட அந்த இடம், இடமாற்றம் செய்த பிறகு, அங்கு சுத்திகரிக்கப்பட்ட நிலையம் அமைக்கப்பட்டு, அதன் மூலமாக குடிநீரானது சுத்திகரிக்கப்பட்டு, இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 313, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

313—

குப்பையை அகற்றுதல்

***71961—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் நாள்தோறும் அகற்றப்படும் குப்பையின் அளவு என்ன?

(ஆ) அது எங்கே கொட்டப்படுகிறது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் நாள்தோறும் 3,000 டன் குப்பையும் மற்றும் 500 மெட்ரிக் டன் கற்கூளங்களும் அகற்றப்படுகின்றன. இவ்வாறு அகற்றப்படும் குப்பை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திலும் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திலும் கொட்டப்படுகின்றன.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத் தெருக்களில் குப்பைகளே காண முடியாத அளவுக்குக் குப்பை இல்லா நகரமாக்கிய மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப் பெறப்படுகின்ற குப்பைகள் தரம் பிரிக்கப்படுகின்றனவா, இந்தக் குப்பைகள் தேங்காமல் இருக்க இந்தக் குப்பைகளை மறு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளும் வகையில், குப்பையிலிருந்து மின்சாரம் அல்லது எரு போன்ற வகைகள் தயாரிப்பதற்கு, பயன்பாட்டிற்கு இந்தக் குப்பைகள்

2005 ஏப்ரல் 6]

எடுத்துக்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியால் எடுக்கப்படுகின்ற குப்பையானது, மட்கும் குப்பை என்றும், மட்காத குப்பை என்றும் இனம் பிரித்து, தங்கள் வாயிலுக்குக் குப்பை சேகரிக்க வரும் மாநகராட்சிப் பணியாளர்களிடம் வழங்கவும், பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டவும், பத்திரிகைகள், வானொலி போன்ற தகவல்பரப்பு சாதனங்களின் மூலம்...

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் பதில் முடிகிறவரை வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு பொதுமக்களிடமிருந்து படிப்படியாக வரவேற்பு அதிகரித்து வருகிறது. மேலும் இக்குப்பை கொட்டும் வளாகத்தில் நாளொன்றுக்கு சுமார் 500 மெட்ரிக் டன் வரை நிலத்தினை வளப்படுத்தும் பொருளாக குப்பையினை மாற்ற தனியார் துறையின் மூலம் தொழிற்சாலை நிறுவவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் சுமார் 106 இடங்களில் பன்முகப்படுத்தப்பட்ட முறையில் எரு தயாரிக்கிற மண்டலங்களில் கூடங்கள் கட்டப்பட்டு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(திரு. துரைமுருகன், திரு. பரிதி இளம்வழுதி, திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. ஜி.கே. மணி ஆகியோர் எழுந்துநின்று ஏதோ கேட்க முற்பட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள், வாய்ப்புத் தருகிறேன்.